# வெறி நாய்கடி பாதுகாப்பு விழிப்புணர்வு

ராமேஸ்வரம் பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 17.12.2025 அன்று “SAFE GUARADING ONESELF FROM STARY DOGS” என்னும் தலைப்பில் தெரு நாய்களால் ஏற்படும் தீமைகள், அவற்றிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வது குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கால்நடை மருத்துவர் டாக்டர் C.வைத்தீஸ்வரன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கல்லூரியின் முதல்வர் முனைவர் இரா.ரமேஷ்குமார் (மு.கூ.பொ) அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் பேசுகையில் தெரு நாய்கள் என்பது வளர்ப்பவர்கள் இல்லாத ஒரு உயிர். அவ்வுயிர் போகிற போக்கில் வாழக்கூடியது. இவற்றினால் குழந்தைகளும் வயதானவர்களும், வாகன ஓட்டிகளும் கவனமாக இருக்க வேண்டும் என்றார். இவரைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் டாக்டர் C.வைத்தீஸ்வரன் பேசுகையில் தெரு நாய்களினால் ரேபிஸ், டெட்டனஸ் மற்றும் பிற தொற்றுகளும் ஏற்படுகிறது. ரேபிஸால் மூளை செயலிழப்பு ஏற்படுகிறது. நாயின் நகங்களினாலும், உமிழ் நீரினாலும் தொற்றுகள் மற்றும் டெட்டனஸ் போன்றவை ஏற்படலாம். மேலும் சாலை விபத்துகளும் சுகாதாரக் நோய்களும் ஏற்படுகிறது. எனவே அவற்றை விட்டு நாம் ஒதுங்கியே இருக்க வேண்டும் என்று பேசினார். தெரு நாய்களால் ஏற்படும் தீமைகள் குறித்து மாணவர்கள் கேட்ட கேள்விக்கு விளக்கமளித்தார். இறுதியாக நாட்டு நல பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு வே.பாஸ்கரன் அவர்கள் நன்றி கூறினார். இந்நிகழ்வில் கண்காணிப்பாளர், நிதியாளர், மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் மூலம் மாணவர்கள் பயன் அடைந்தனர்.


BHARAT RATNA DR.A.P.J ABDUL KALAM
GOVT.ARTS AND SCIENCE COLLEGE
"SAFEGUARDING
DOGS"
GPS Map Camera
Rameswaram, Tamil Nadu, India
9/84, Rameswaram, Tamil Nadu 623526, India
Lat 9.261999° Long 79.308468°
Wednesday, 17/12/2025 11:13 AM GMT +05:30
Google


BHARAT RATNA DR.A.P.J ABDUL KALAM
GOVT.ARTS AND SCIENCE COLLEGE
"SAFEGUARDING
DOGS"
GPS Map Camera
Rameswaram, Tamil Nadu, India
9/84, Rameswaram, Tamil Nadu 623526, India
Lat 9.261811° Long 79.30871°
Wednesday, 17/12/2025 11:09 AM GMT +05:30
Google


GPS Map Camera
Rameswaram, Tamil Nadu, India
9/84, Rameswaram, Tamil Nadu 623526, India
Lat 9.261936° Long 79.308319°
Wednesday, 17/12/2025 11:13 AM GMT +05:30
Google


BHARAT RATNA DR.A.P.J ABDUL KALAM
GPS Map Camera
Rameswaram, Tamil Nadu, India
9/84, Rameswaram, Tamil Nadu 623526, India
Lat 9.261938° Long 79.308333°
Wednesday, 17/12/2025 11:08 AM GMT +05:30
Google